இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடினமான காலங்களில் மறைப்பணியில் ஈடுபட்ட அசாதாரண பெண்களாகிய அருள்சகோதரிகள், சமூகத்தின் மிகவும் கைவிடப்பட்ட பகுதிகளில் அடிப்படை மற்றும் பொருளாதாரத் துயரங்களில் தங்களை தாழ்த்தியவர்கள் என்றும், உதவி தேவைப்படும் நிலையில் இருப்பவர்களுடன் நெருக்கமாக இருப்பதற்காக, போர்க்காலத்தில் கொளரமான வன்முறையால் பாதிக்கப்பட்டு, தங்கள் உயிரைப் பணயம் வைக்க ஒப்புக்கொண்டவர்கள் அவர்கள் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.


அருள்சகோதரிகளுடன் திருத்தந்தை பதினான்காம் லியோ (ANSA)

# நமது பணிகள் கடவுளின் கரங்களில் உள்ளன

பணியாற்றுவதற்கான ஆற்றல் கடவுளிடமிருந்து வரும் போது அனைத்தும் சாத்தியம் என்றும், நமது பணிகள் கடவுளின் கரங்களில் உள்ளன, 'நாம் பயனற்ற பணியாளர்கள்; நம் கடமையைத்தான் செய்தோம்' என்று வலியுறுத்தும் நற்செய்தியின் வரிகளுக்கேற்ப நாம் வாழவேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

செப்டம்பர் 22, திங்களன்று வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில், புனித பவுல் சாட்ரஸ் சபை (79), சலேசிய சபை (25), புனித கேத்தரின் சபை (45), புனித பூமியின் கார்மலேட் சபை (25) அருள்சகோதரிகள் ஏறக்குறைய 175 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்னும் வார்த்தைப்பாடுகளின் வழியாக துறவற வாழ்வைத் தேர்ந்துள்ள அருள்சகோதரிகள், கிறிஸ்துவைப் பின்பற்றவும், வாழ்வின் கடைசி நிலை வரை இறைப்பணியாற்றி, தங்கள் உயிரைத் தியாகம் செய்து மறைசாட்சிகளாக மாற்றும் நிலைக்குத் தங்களையேக் கையளித்தனர் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

கடினமான காலங்களில் மறைப்பணியில் ஈடுபட்ட அசாதாரண பெண்களாகிய அருள்சகோதரிகள், சமூகத்தின் மிகவும் கைவிடப்பட்ட பகுதிகளில் அடிப்படை மற்றும் பொருளாதாரத் துயரங்களில் தங்களை தாழ்த்தியவர்கள் என்றும், உதவி தேவைப்படும் நிலையில் இருப்பவர்களுடன் நெருக்கமாக இருப்பதற்காக, போர்க்காலத்தில் கொளரமான வன்முறையால் பாதிக்கப்பட்டு, தங்கள் உயிரைப் பணயம் வைக்க ஒப்புக்கொண்டவர்கள் அவர்கள் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

செபவழிபாடுகள், திருப்புகழ்மாலை, பாடல்கள் போன்றவற்றின் வழியாக தங்களது வாழ்வை மேம்படுத்திக்கொண்டவர்கள் அவர்கள் என்றும், செபத்தாலும் நோன்பாலும் தங்களது உடலைக் கட்டுப்படுத்தினர், செபத்தின் இனிமையான உணர்வால் மனதை வளர்த்தனர், விண்ணக மகிழ்ச்சியால் தங்கள் ஆன்ம தாகத்தைத் தணித்தனர் என்றும் கூறினார் திருத்தந்தை.

ஞானமான மற்றும் ஆழமான வார்த்தைகளான இவை அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் அடிப்படை வேர்களை, காட்சி தியானம் மற்றும் மறைப்பணி அர்ப்பணிப்பில் நினைவுபடுத்துகின்றன என்றும், இவை இரண்டு நிலைகளிலும் நம்பிக்கையின் ஆற்றல், ஒரே மூலமான கிறிஸ்துவிடமிருந்து வருகிறது என்றும் எடுத்துரைத்தார்.

மெரினா ராஜ் – வத்திக்கான்

# இணைப்பின் பாலங்களைக் கட்டுபவர்களாகத் தொடர்ந்து இருப்போம்


போர்ச்சூழல் நிறைந்த இஸ்ரயேல் பகுதி (AFP or licensors)

உண்மையுள்ள கத்தோலிக்கர்களாகவும் பெருமைமிக்க இந்தோனேசியர்களாகவும், நற்செய்திக்கு அர்ப்பணிப்புடன், சமூகத்தில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பவும் முடியும் என்பதை உரோமில் வாழும் இந்தோனேசிய மக்கள் தங்கள் வாழ்வால் வெளிப்படுத்துகின்றனர் என்றும், மக்கள், கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைகளுக்கு இடையே இணைப்பின் பாலங்களைக் கட்டுபவர்களாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் வாழ்த்தினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

செப்டம்பர் 22, திங்களன்று வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் உரோமில் உள்ள இந்தோனேசியா கத்தோலிக்க சமூகத்தை சார்ந்த மக்கள் ஏறக்குறைய 200 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் இந்தோனேசியாவிற்கு வருகை தந்தை முதல் ஆண்டின் நிறைவு மற்றும் இந்தோனேசியா மற்றும் திருஅவை இரண்டிற்கும் இடையிலான 75 ஆண்டுகால உறவிற்காக அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

உரையாடல் மற்றும் நட்புறவின் பாதை சவாலானதாக இருக்கலாம், ஆனால் அது அமைதியின் விலைமதிப்பற்ற பலனைத் தருகிறது என்று வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள், அமைதி மற்றும் ஒற்றுமையின் அடித்தளமான "சந்திப்பு கலாச்சாரத்தின்" தெளிவான எடுத்துக்காட்டுகளாகவும், பிளவுபடுத்த தூண்டும் உலகில் ஒற்றுமையின் இறைவாக்கினர்களாகவும் இருக்க வலியுறுத்தினார். சொந்த நாட்டைவிட்டு வெகு தொலைவில் இருந்தாலும், துடிப்பான மரபுகளைப் பாதுகாப்பதிலும், ஒருவருக்கொருவர் அக்கறை கொள்வதிலும் சிறந்து விளங்கும் இந்தோனேசிய மக்களை வாழ்த்திய திருத்தந்தை அவர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களல்லாத அண்டை நாடுகளுடன் பராமரிக்கும் வலுவான உறவுகளுக்கு தனது நன்றியினையும் எடுத்துரைத்தார்.

மக்களின் இத்தகைய அமைதியான பணிச் செயல்கள் இந்தோனேசியாவின் குறிக்கோளான "பன்முகத்தன்மையில் ஒற்றுமை" என்பதை பிரதிபலிக்கின்றன என்றும், ஜகார்த்தாவில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியது போல்,

பன்முகத்தன்மைக்கு மத்தியில் நல்லிணக்கத்தைப் பேணுவது என்பது ஒரு நுட்பமான "அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்ட கைவினைத்திறன் வேலை" போன்றது என்றும், புதிய புலம்பெயர்ந்தோரை வரவேற்பதில் இருந்து உள்ளூர் சமூகங்களுடன் உங்கள் கலாச்சாரத்தைப் பகிர்ந்து கொள்வது வரை இந்த ஒற்றுமையை நீங்கள் கடைப்பிடிக்கும் விதங்களால் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

மெரினா ராஜ் - வத்திக்கான்



# மரியாவின் தூய பெயர் தேவாலயத்தின் புனித பயணம்



பினாங்கு, பெர்மாத்தாங் திங்கி- கடந்த 16 செப்டம்பர் 2025 (செவ்வாய்) மலேசியா தினம் பொது விடுமுறையை முன்னிட்டு எங்கள் பங்கு குருவானவர் அருட்பணியாளர் லுயிஸ் லோய் அவர்களின் ஏற்பாட்டில் குடும்ப தினமாக, அன்னை வேளாங்கன்னி சிற்றாலயம், ஜெலாப்பாங், ஈப்போ, மற்றும் கம்பார், திருஇருதய தேவாலயங்ககுக்குப் புனித பயணம் மேற்கொண்டோம். இப்பயணத்தில் ஏறக்குறைய 580 பங்கு மக்கள் கலந்துக் கொண்டனர். 13 பேருந்துகள் இப்பயணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இப்பயணத்தில் தமிழ், சீனம் மற்றும் சபா மாநிலத்தவரின் அதிச பங்கு மக்கள் ஆகியோர் பங்கேற்றனர். போக்குவரத்து வசதி மதிய உணவு செலவுகளை அருட்பணியாளர் பொறுப்பேற்றுக் கொண்டார். ஈப்போ சிற்றாலயத்தில் எங்கள் பங்கு தந்தை மும்மொழியிலும் திருப்பலி நிறைவேற்றினார். கம்பார் தேவாலயத்தில் இயேசுவின் திருஇருதய நவநாள் ஜெபத்தை மும்மொழியில் வழிநடத்தினோம். அங்கே வைக்கப்பட்டுள்ள 4 திருப்பண்டங்களின் புனிதர்களின் வரலாற்றை அறிந்துக்கொண்டோம். அங்கு தேனீர் விருந்தும் எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஒரு நாள் புனித பயணம் எங்கள் மூவினத்தவரின் ஒற்றுமையை வெளிப்படுத்தியது. மதிய உணவு வேளையிலும் ஒருவருக்கொருவர் உணவை பரிமாறுகையில் எங்களிடையே பகிர்ந்து வாழும் பண்பை வெளிக்கொணரும் வகையில் அமைந்தது.

ஷீலா, மரியாளின் தூய பெயர் தேவாலயம், பெர்மாத்தாங் திங்கி

# பேராயர் முன்னிலையில் யூபிலி மறைப்போதக மாநாடு



செராஸ்: கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இருந்து முந்நூற்று நாற்பது மறைக்கல்வியாளர்கள், செப்டம்பர் 5-6 தேதிகளில், புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில் நடைபெற்ற யூபிலி மாநாட்டில் ஒன்றுகூடினர். "நம்பிக்கையின் திருப்பயணிகளாக மறைக்கல்வியாளர்கள்" என்பதே இம்மாநாட்டின் கருப்பொருளாகும்.

இக்கொண்டாட்டம், பேராயர் மேதகு ஜூலியன் லியோவ் அவர்கள் தலைமையேற்ற திருப்பலியுடன் தொடங்கியது. பெற்றோரே குழந்தைகளின் முதல் மறைக்கல்வியாளர்கள் என்றும், கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவிலிருந்தே உண்மையான போதனை பிறக்கிறது என்றும் அவர் விசுவாசிகளுக்கு நினைவூட்டினார். அன்பு மற்றும் மனமாற்றத்தில் வேரூன்றிய நம்பிக்கையின் சாட்சிகளாக இருக்குமாறு மறைக்கல்வியாளர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

தனது முக்கிய உரையில், குழந்தைகளின் உருவாக்கத்தில் மறைக்கல்வியாளர்களின் பங்கைப் பற்றிப் பேசிய பேராயர், உயர் மறைமாவட்ட மறைக்கல்வி மையத்தின் (ACC) கீழ் உள்ள பணிக்குழுக்களின் புதிய சின்னங்களையும் அறிமுகப்படுத்தினார்.

ACC-யின் இயக்குனர் டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு அவர்கள் பேசுகையில், மறைக்கல்வி என்பது ஒரு வேலையல்ல, மாறாக அது ஒரு அழைத்தல் என்றும், அது திருமுழுக்கிலிருந்தும், நற்செய்தி அறிவிக்கும் திருஅவையின் பணியிலிருந்தும் பிறக்கிறது என்றும் வலியுறுத்தினார்.

அதன்பின், பங்கேற்பாளர்கள் பின்வரும் பயிலரங்குகளில் கலந்துகொண்டனர்:

- நல்லாயன் மறைக்கல்வி (CGS): இது மாண்டிசோரி (Montessori) கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு திட்டமாகும். திருமறை, திருவழிபாடு மற்றும் செயல்முறைக் கற்றல் மூலம் குழந்தைகளின் விசுவாசத்தை வளர்ப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறப்புத் தேவையுடையோருக்கான மறைக்கல்வி (CLSN): 2022-ல் உருவாக்கப்பட்ட இப்பணிக்குழு, பல்வேறு திறன்களைக் கொண்ட பிள்ளைகளுக்கு அனைவரையும் உள்ளடக்கிய மறைக்கல்வியையும், அருட்சாதனங்களுக்கானத் தயாரிப்பையும் வழங்குகிறது.
- உடலின் இறையியல் (TOB): படிவம் 4 மற்றும் 5 மாணவர்களுக்கு அன்பு, பாலியல் மற்றும் அடையாளம் ஆகியவற்றை நற்செய்தியின் ஒளியில் புரிந்துகொள்ள இப்பயிலரங்கு உதவுகிறது.
- பெரியோருக்கான கிறிஸ்தவ புகுமுக நிலை (RCIA): பெரியோருக்கான புகுமுகப்பயிற்சியை, சமூகம் சார்ந்த ஒரு விசுவாசப் பயணமாக மீண்டும் நிலைநிறுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

முதல் நாள் மாலை, எம்மாவுஸ் அனுபவத்திற்கு ஒப்பிடப்பட்ட சிலுவைப் பாதை பக்திமுயற்சி நடைபெற்றது. இரண்டாம் நாள், பணிக்குழுத் தலைவர்கள் தங்கள் மகிழ்ச்சிகளையும் சவால்களையும் பகிர்ந்துகொண்ட ஒரு கலந்துரையாடலுடன் நிறைவுற்றது. அங்கே, ஒரு முழுமையான மறைக்கல்வியின் தேவை எடுத்துக்காட்டப்பட்டது.

அருட்தந்தை டேவிட் அருள்நாதன் தலைமையேற்ற திருப்பலியுடன் மாநாடு முடிவடைந்தது. விசுவாசம் கடவுளின் இரக்கத்திலும் அனைவரையும் அரவணைக்கும் தன்மையிலும் வேரூன்றியுள்ளது என்று அவர் மறைக்கல்வியாளர்களுக்கு நினைவூட்டினார். ஏற்பாட்டுக் குழுத் தலைவி அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் FdCC அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்தார். இம்மாநாடு, மறைக்கல்வியாளர்கள் நற்செய்தியின் இன்னும் சிறந்த தூதுவர்களாக திகழ ஊக்கமளிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



# அருள்பணியாளர் வில்லியம் பிள்ளை

22.2.2022 அன்று அருள்பணியாளராக அபிசேகம் செய்யப்பட்ட வில்லியம் பிள்ளை அவர்களின் இயற்பெயர் முரளிதரன் த/பெ கோபாலகிருஷ்ணன் பிள்ளை என்பதாகும்.

பிறப்பால் இந்துவாக இருந்தாலும் உண்மை கடவுளின் தேடலில் இயேசுவைக் கண்டடைந்தார். தன் வாழ்வில் அவருக்காக பணி செய்யும் கடமையைக் கடைப்பிடித்தார். 1996இல் திருமுழுக்குப் பெற்று ரோமில் குருத்துவப்படிப்பை மேற்கொண்டார். அதன்பின் ஜொகூர்- பத்து பகாட்டில் பிப்ரவரி 22ஆம் நாள் 2022-இல் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டார்.

பத்து பகாட், மாசாய், குளுவாங் ஆகிய பங்குகளில் பணியாற்றிய அவர் தமிழ் மொழி பேசும் விசுவாசிகளுக்கு மறைபோதகமும், ஜொகூர்-மலாக்கா மறைமாவட்டத்தில் மிஷனரி பள்ளிகூடங்களுக்குப் பொறுப்பாளராகவும் இருந்து வந்தார்.

அனைவரிடமும் அன்போடு பழகும் அவர் தமது 60-ஆவது வயதில் 19.9.2025 மரணமடைந்தார். அவரின் உடல் காஜாங், திருக்குடும்ப பங்கில் ஜொகூர் மலாக்கா ஆயர் பெர்னட் போல் அவர்களால் இறுதி திருப்பலி நிறைவேற்றி அதன் பின் செராஸ் கிறிஸ்தவ கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

ஆ.வி.டேவிட். – குளுவாங்





# பொதுக்காலம் ஆண்டின் 27 ஆம் ஞாயிறு 04-10-2025

அபாக்கூக்கு 1: 2-3, 2: 2-4
திருப்பாடல்: 95: 1-2, 6-9
2 தீமோத்தேயு 1: 6-8, 13-14
லூக்கா 17: 5-10

## எங்கள் நம்பிக்கையை அதிகமாக்கும்.

கிறிஸ்துவில் அன்பான சகோதர சகோதரிகளே, இன்று நாம் ஆண்டின் 27 ஆம் ஞாயிறு சிந்தனையைக் காண்கிறோம். இன்றைய வாசகங்கள் நாம் எவ்வாறு நமது நம்பிக்கையை இழந்துபோகாமல் ஆண்டவரை முழுமையாக நம்பவேண்டும் என்று கூறுகின்றன.

முதல் வாசகத்தில் நூலின் ஆசிரியர் ஆண்டவரை நோக்கிப் புலம்பி அழுவதையும் உடனே ஆண்டவர் அவருக்குப் பதில் அளித்து, உன்னுடைய நம்பிக்கையைத் தளரவிடாதே என்றும் காலம் தாழ்த்தாது, நிறைவேறியே தீரும் என்றும் வாக்குறுதி அளிப்பதையும் நாம் வாசிக்கிறோம்.

அதே போல திருப்பாடலில் நாம் காண்பது, இஸ்ரயேல் மக்கள் தாகத்தால் வாடியபோது, மோசேவுக்கு எதிராக மக்கள் கூக்குரலிட்டபோது, தந்தை இறைவன் பாறையிலிருந்து தண்ணீரைத் தந்து அவர்கள் தாகத்தைத் தீர்த்தார். இதை திருப்பாடல் ஆசிரியர் நினைவுகூர்ந்து பாடுகிறார். ஆண்டவருடைய செயல்களைக் கண்முன்னே கண்டிருந்தும் இஸ்ரயேல் மக்கள் இறைவனைச் சோதித்தனர்.

இரண்டாம் வாசகத்தில் இஸ்ரயேல் மக்கள் முறையிட்டதைப் போல் அல்லாமல் புனித பவுல் தாம் சிறையில் இருப்பதைப் பற்றி கவலையோ வெட்கமோ படத் தேவையில்லை. ஏனென்றால் அவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீது வைத்துள்ள நம்பிக்கை மிகவும் பெரிது என்று தீமோத்தேயுவுக்கு துணிவை ஊட்டுகிறார்.

நற்செய்தியில் இயேசுவிடம் திருத்தூதர்கள் தங்களுடைய நம்பிக்கையை அதிகமாக்கும் என்று கேட்கிறார்கள். இயேசுவோ மிகப்பெரிய அளவில் அல்ல, கடுகுவிதை அளவுக்கு நம்பிக்கை இருந்தாலே போதும், உங்களால் வல்ல செயல்கள் செய்யக்கூடும் என்று கூறுகிறார். மேலும் நாம் பணிசெய்யும்போது, வெகுமதியையோ அல்லது பாராட்டையோ எதிர்பார்க்காமல் என்னுடைய பணியைத் தான் செய்தேன். இதில் பெருமைப்பட ஒன்றுமில்லை என்ற மனநிலை நமக்கு வேண்டுமென்று இயேசு கற்பிக்கிறார். ஏனென்றால் கிறிஸ்துவின் வேலையாட்களான நாம், நமக்குக் கொடுக்கப்பட்டதைத் தான் செய்தோம் என்று தாழ்மைக் குணம் கொண்டிருக்கவேண்டும்.

இன்று திருஅவையிலும் சமூகத்திலும் நாம் செய்யும் அனைத்தையும் விளம்பரப்படுத்திக்கொள்ளும் மனப்பான்மை எங்கும் நிறைந்துள்ளது. வலைதளத்தில் நாம் செய்யும் அனைத்தையும் வெளியிட்டு, அதிகமானவர்களைக் கவர நினைக்கின்றோம். மனித மனம் தாம் செய்யும் அனைத்திற்கும் பாராட்டும் வெகுமதியையும் எதிர்பார்த்து அனைத்தும் செய்கிறது. இது இளைஞர்களை மட்டுமல்ல, இன்று பெரியோர்களையும் அடிமைப்படுத்தி வைக்கிறது. இன்றைய ஊடகங்களால் ஒவ்வொரு குடும்பத்தினரும் அளவுக்கதிகமாக ஆட்கொள்ளப்பட்டு அதனால் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பும், அக்கறையும் மன்னிப்பும் காட்டத் தவறிக்கொண்டிருக்கின்றனர். இந்த ஊடக கலாச்சாரம் நமக்கு மகிழ்ச்சியைத் தருமா? இவற்றில் ஏதாவது ஒன்று, விண்ணக இன்பத்திற்கு நம்மை இட்டுச்செல்லுமா?

திருத்தூதர்கள் கேட்டுக்கொண்டது போல நம்முடைய நம்பிக்கையை அதிகமாக்குமாறு தூய ஆவியாரிடம் நாமும் கேட்போம். ஏனென்றால் தூய ஆவியானவர் நம்மில் செயல்பட அவரை நாம் அனுமதிக்கவேண்டும். இல்லையென்றால் நம்முடைய நம்பிக்கை ஆற்றல்மிக்கதாய் செயலாற்றாது. நம்முடைய நோக்கமும், எதிர்நோக்கும், இலட்சியமும் உலகைச் சார்ந்ததாகவே இருக்கும். விண்ணக மாட்சி நமக்குக் கிட்டாது. தந்தையும், மகனும், தூய ஆவியாரும் இணைந்து நம்மில் செயலாற்ற நம்முடைய நம்பிக்கையை இறைவல்லமையால், இறைவேண்டல்களினால், இரக்கச்செயல்களால் அதிகமாக்கிக்கொள்வோம்.

ஜோசபின் போஸ்கோ, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.